




ஸ்ரீ பெருந்தேவி தாயார் ஸமேத ஸ்ரீ தேவப்பெருமாள், காஞ்சீபுரம்

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம்

# திருவாய்மொழியே நமது ஸித்தாந்தம்



*மதுரகவிகள, நம்மாழ்வார், நாதமுனிகள்*

*பிரசுரித்தவர் - திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீனிவாச வரதன் , நியூடில்லி*

***E-Mail - yesvee@satyam.net.in*** ***Telephone -011-29231648***





ஸ்ரீமதே ராமாநுஜாய நம : நித்யஸ்ரீ : நித்யமங்களம்

# ஸ்ரீரங்க நாராயண ஜீயர் ஸ்வாமி

**50வது பட்டம்,**

**ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமி மடம்**

128, வடக்கு உத்திர வீதி, ஸ்ரீரங்கம் – 620 006.

**SRIRANGA NARAYANA JIYAR SWAMI**

Sriranga Narayana Jiyar Swami Matam

*128, North Uthra Street, Srirangam - 620 006.*

ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகராயும் ஸ்ரீஸம்யமி ஸார்வபௌமராயும், சாஸநாதிகத ஸ்ரீரங்கநாத ஸகலவித கைங்கர்ய நிர்வாஹகராயும், ஸ்ரீரங்கம் ஸ்தலத்தார்களின் முதல்வராயும் எழுந்தருளியிருக்கும்

**ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி**

**ஸ்ரீ ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமி**

போன் : 2432810


12/06/2009

ஸ்ரீமான் திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீநிவாஸ வரதன் அவர்களுக்கு அனேக ஆசீர்வாதம். தங்கள் கடிதமும் அத்துடன் இணைக்கப்பட்ட குறிப்பேடும் கிடைக்கப்பெற்றோம். குறிப்பேடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதற்பகுதி வைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பற்றியும், இரண்டாவது பகுதி திருவாய்மொழியே நமது ஸித்தாந்தம் என்ற தலைப்பிலும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. குறிப்பேட்டினை படிக்கும் பொழுது தங்களுக்கு நமது ஸித்தாந்தத்தின் உள்ள ஈடுபாடும் ஆர்வமும் நன்கு புலப்படுகிறது. தாங்கள் எடுத்துக் கொண்டுள்ள இந்த சிறந்த முயற்சி ~~[illegible]~~ எளிமையான நடையில் அமைந்துள்ளதால் நமது இளைய தலைமுறையினருக்கு பெரு நல்ல வழிகாட்டியாக அமையும்.

தாங்கள் எடுத்துக்கொண்டுள்ள முயற்சி மேன்மேலும் வளர்ந்து நமது வைஷ்ணவ ஸித்தாந்தம் தழைத்தோங்க எல்லாம் வல்ல பெரிய பெருமாளும், பெரிய பிராட்டியும் தங்களுக்கு அருள்புரிய பிரார்த்திக்கிறேன்.

அனேக மங்களாசாஸனங்கள்,

ஸ்ரீ ரங்கநாராயண ஜீயர்



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

**ஸ்ரீமத் பரமஹம்ஸ அப்பன் பரகால ராமாநுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமி**

**தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் : ஸ்ரீ எம்பார் ஜீயர் மடம்**

30, மணவாளமாமுனி கோயில் வீதி, ஸ்ரீபெரும்பூதூர் - 602 105. காஞ்சிபுரம் மாவட்டம்.

தொலைபேசி : 27162073 செல் : 9994323397



தேதி : 16/5/09

## அணிந்துரை

உண்மையான ஆர்வத்தோடு ஸ்ரீவைஷ்ணவத்தை உள்ளபடி அறிய விரும்பும் ஆர்வலர்களுக்கு உரிய கையேடு இந்நூல்.

பகவானைப் போல, வேதங்களைப் போன்று, ஸ்ரீவைஷ்ணவமும் அனாதியானது.

இந்நூலின் முதல் பகுதியில் குருபரம்பரையின் வழியில் நின்று நமது சித்தாந்தம் தத்துவத்ரயம் (முப்பெரும் தத்துவம்) என்பதை விளக்குகிறார் — விசிஷ்டாத்வைதம் இதனால் புரிகிறது. தக்க மேற்கோள்கள் கூறியுள்ளார் ஆசிரியர்.

சித் - அசித் - ஈச்வர தத்வங்கள் விளங்குகின்றன.

அடுத்து, உபநிஷத் வாக்கியங்கள் கொண்டு ஸ்ரீமந்நாராயணனே தெய்வம் என்பதை விளக்குகிறார்.

வடமொழி மேற்கோள்கள் தேவநாகரியிலும் தமிழ் எழுத்துக்களிலும் தரப்படுகின்றன.

ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளை மேன்மைக் கொண்டு அவனை எளிதில் அடைவதற்கான வழியாக அறிவிக்கப் படுகிறது.

இறைவனுக்கும் நமக்கும் உள்ள சரீர - ஆத்ம உறவின் முக்கியத்துவம் கூறப்படுகிறது.

பின்னர் மோக்ஷ இச்சை உள்ளவர்கள் அறிய வேண்டிய மூன்று ரகசியங்கள் விளக்கப்படுகின்றன. அவற்றுக்கான மந்திர விவரணங்கள் அமைப்பெறுகின்றன.

P.T.O.

இவ்வாறு ஒரு பத்திரிகையை முடித்து,

இரண்டாம் பகுதியில் நம்மாழ்வாரின் திருவாய்மொழியே வேத வேதாந்தம் என்று திடமாக எடுத்துக்காட்டு-கிறார் இந்நூலாசிரியர். இது குறிப்பிட்டுப் பாராட்டத் தக்கது.

தத்துவ, ஹித, புருஷார்த்த ஞானத்தோடு இல்லாமல் பகவத் இராமானுஜர் மேம்பாட்டை ஒருபகுதியாக இணைத்து போற்றியுள்ளது வரவேற்கத்தக்கது. அதிக சான்றுகளுடன் எடுத்துக்காட்டியது சிறப்பாகும். இன்பமாரியைத் திருவாய்மொழி ஈடு இணையற்றது என்று இந்நூலார் உரைக்கலாம்.

ஒத்துள்ளவர் இவ்வாய்மொழியைப் போல் "திருமாலவன் கவியான ஆழ்வாரின் திருவாய்-மொழிக்கு ஈடு இணை இல்லை என்பது நிரூபித்துள்ளார்.

அனைத்தையும் ஆர்வலர்களுக்கு இன்றியமையாத ஒன்றே.

வாழ்க! வாழ்க!!

ஸ்ரீஜயஸ்ரீ: ஸ்ரீஜய மங்களம்!

அப்பன் பரகால ராமாநுஜ
எம்பார் ஜீயர்.

Srimathe Ramanujaya Namaha
Srimathyai Kothayai Namaha

**H. H. SRI SRI SRI SHATAKOPA RAMANUJA JEEYAR**
**SRI MANAVALA MAMUNI JEEYAR MUTT.**



Andal Sannidhi Street, (Adjacent Andal Temple Gate)
SRIVILLIPUTTUR - 626 125.
Virudhunagar District, Tamilnadu, India.
परमहंस श्री श्री श्री शटकोप रामानुज जीयर स्वामी
श्री मनवाल महामुनि जीयर मठ.
आण्टाल सन्निधि वीथी, श्रीविल्लीपुत्तुर - 626 125. तमिलनाडु.





Ph: 04565 - 263222 | www.andaljeeyar.org / email: swamiji@andaljeeyar.org | Cell: 92453 72244

SRIVILLIPUTTUR

Ref:

Date: 6-6-2009

ஸ்ரீ முகம்

ஸ்ரீ மதே ராமநுஜாய நம
ஸ்ரீ மத் வர வர முநயே நம

திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ வரதன் (புதுதில்லி) வெளியிட்டுள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் மற்றும் திருவாய்மொழியே நமது ஸித்தாந்தம் என்று இரண்டு பகுதிகளாய் அமைந்துள்ள குறிப்பேட்டிற்கு நமது மங்களாசாசனங்கள்.

ஸித்தாந்தம் என்பது குறிக்கோளையும், ஐதிகங்களையும் பரம்பரை வழக்கங்களையும் குறிப்பிடும். இந்நூல் ஆசிரியர் தம்முடைய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி "ஸகல ஜீவாத்மாக்களும் உய்யும் வழி இளைய சமுதாயித்தனரின் மனதில் நன்கு பதியவேண்டும் என்கிற ஆதங்கத்தில் பிறந்ததே இக்குறிப்பேடு" என்கின்ற அவருடைய மிகச் சிறந்த நோக்கம் அவர் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ரத்தினம் என்பதை தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றது.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் முக்கிய கருத்துக்களையும், மேதினியில் வைகாசி விசாகத்தோன் வேதத்தை செந்தமிழால் விரித்து உரைத்த ஸ்ரீநம்மாழ்வாரின் ஸாம வேத ஸாரம் என்று போற்றப்படுகின்ற திருவாய்மொழியின் சிறந்த கருத்துக்களையும் அனைவரும் புரிந்துக் கொள்ளும் வண்ணம் மிக எளிமையாக கூறியுள்ளது பாராட்டுதற்குரியது.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் மற்றும் திருவாய்மொழி என்கின்ற இரண்டு ஸாகரங்களில் மூழ்கி இரண்டு நல் முத்துக்களை இந்த நூல் வடிவில் அவர் நல்கியுள்ளார். இம்முத்துக்களை ஸ்ரீ வைஷ்ணவர்கள் சூடிக் கொண்டால் பெரும் பேறு பெற்றவர் ஆவர்.

இறுதியாக அவர் அனைத்து ஸ்ரீ வைஷ்ணவர்களும் அவரவர் ஆசார்யரை ஆஸ்ரயித்து நமது ஸித்தாந்தை, திருவாய்மொழியின் ஆழ்ந்த உட்கருத்துக்களையும் கேட்டறிந்து உய்ய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன் எனக் கூறியுள்ளது. அவருடைய ஆசார்ய பக்தியையும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பால் அவர் கொண்டுள்ள மாளாத அன்பையும் வெளிப்படுத்துகின்றது.

மேலும் மேலும் இது போன்ற நல் முத்துக்களை அவர் நல்கிட நமது மங்களாசாசனங்கள்.,

Sri Jeeyar
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சடகோப ராமநுஜ ஜீயர்